

சென்னை, கோபாலபுரம் இல்லத்தில், முரசொலி செல்வம் அவர்களின் உடலுக்கு, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.



சென்னை, கோபாலபுரம் இல்லத்தில், முரசொலி செல்வம் அவர்களின் உடலுக்கு, கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.



சென்னை, கோபாலபுரம் இல்லத்தில், நேற்று முன்தினம் (10.10.2024) முரசொலி செல்வம் அவர்களின் உடலுக்கு, தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் பொதுச் செயலாளர் திருமதி பிரேமலதா மற்றும் அவரது சகோதரரும் துணை செயலாளருமான சுதீஷ் ஆகியோர் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (10.10.2024) சென்னை, கோபாலபுரம் இல்லத்தில், முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் வைகோ ஆகியோர் சந்தித்து, முரசொலி செல்வம் அவர்கள் மறைவிற்கு இரங்கல் தெரிவித்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (10.10.2024) சென்னை, கோபாலபுரம் இல்லத்தில், நடிகர் சத்யராஜ், சந்தித்து, முரசொலி செல்வம் அவர்கள் மறைவிற்கு இரங்கல் தெரிவித்தார்.



சென்னை, கோபாலபுரம் இல்லத்தில், நேற்று முன்தினம் (10.10.2024) முரசொலி செல்வம் அவர்களின் உடலுக்கு, நடிகர் பிரசாந்த் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.

# முரசொலி செல்வம் மறைவு!

## தொல்.திருமாவளவன் இரங்கல்!



சென்னை, அக். 12-

விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் முரசொலி செல்வம் அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து அளித்த பேட்டி வருமாறு:

முரசொலி செல்வம் அவர்களின் மறைவு குறித்து அதிர்ச்சி அடைந்து நேரில் சென்று அஞ்சலி செலுத்தினேன். அவர் சிறந்த எழுத்தாளராக, பத்திரிகையாளராகத் திகழ்ந்தவர். திரை உலகிலும் கால் பதித்து திறமையை வெளிப்படுத்தியவர்.

கலைஞரின் முரசொலியில் கடைசி வரை எழுதி தன் முத்திரையை பதித்தவர். அவரை இழந்து வாடும் முதலமைச்சர் மற்றும் அவரது குடும்பத்தாருக்கும், தி.மு.க. வினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வாறு தொல். திருமாவளவன் தெரிவித்தார்.

### வார்டு செயலாளர் கே.ராஜேந்திரன் ஏற்பாட்டில்

# முரசொலி செல்வம் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி!

## கே.அசோகன் தலைமை! ந.கபிலன் சீனி.சின்னசாமி பங்கேற்பு!

திண்டிவனம், அக். 12 -

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மருமகனும்-அரசியல் மேதை முரசொலி மாறன் அவர்களின் சகோதரரும் தலைசிறந்த எழுத்தாளர் பத்திரிக்கையாளருமான முரசொலி செல்வம் அவர்கள் (10.10.2024) அன்று மறைவெய்தினார். விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் நகரம், 14 வது வார்டு கிளைக் கழகம் சார்பில் அன்னாரது திருவுருவப் படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தப் பட்டது.

முன்னாள் மாவட்ட கழக துணைச் செயலாளர் கே.அசோகன் தலைமை வகித்தார்.

இதில் முன்னாள் நகரச் செயலாளர் ந.கபிலன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சீனி. சின்னசாமி எம்.சி, மாவட்டப் பிரதிநிதி வி.எஸ்.முருகன், நகரப் பொருளாளர் சின்னா கே.ராஜேந்திரன், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் எல்.ஐ.சி. ராஜேஷ், எஸ்.பழனி, வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் டி.மோகனசுந்தரம்,

எச்.ஜெயராஜ், கே.விஜயகுமார், கே.கே.தாஸ், மேஸ்திரி ராஜேந்திரன், சிவப்பிரகாசம், கிருஷ்ணன், ராஜசேகரன், வேதமூர்த்தி, ராமசாமி, அன்பு மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்.

14வது வார்டு கிளைக் கழகச் செயலாளர் கே.ராஜேந்திரன் நிகழ்ச்சி ஏற்பாட்டினை செய்திருந்தார்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மருமகனும் – அரசியல் மேதை முரசொலி மாறன் அவர்களின் சகோதரரும் தலைசிறந்த எழுத்தாளர் பத்திரிக்கையாளருமான முரசொலி செல்வம் அவர்கள் (10.10.2024) அன்று மறைவெய்தினார். விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் நகரம், 14 வது வார்டு கிளைக் கழகம் சார்பில் அன்னாரது திருவுருவப் படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. முன்னாள் மாவட்ட கழக துணைச் செயலாளர் கே.அசோகன் தலைமை வகித்தார். இதில் முன்னாள் நகரச் செயலாளர் ந.கபிலன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சீனி.சின்னசாமி எம்.சி, மாவட்டப் பிரதிநிதி வி.எஸ்.முருகன், நகரப் பொருளாளர் சின்னா கே.ராஜேந்திரன், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் எல்.ஐ.சி.ராஜேஷ், எஸ்.பழனி, வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் டி.மோகனசுந்தரம், எச்.ஜெயராஜ், கே.விஜயகுமார், கே.கே.தாஸ், மேஸ்திரி ராஜேந்திரன், சிவப்பிரகாசம், கிருஷ்ணன், ராஜசேகரன், வேதமூர்த்தி, ராமசாமி, அன்பு மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார். 14 வது வார்டு கிளைக் கழகச் செயலாளர் கே.ராஜேந்திரன் நிகழ்ச்சி ஏற்பாட்டினை செய்திருந்தார்.

# இதழியல் மேதை முரசொலி செல்வம்!



எதற்கும் அஞ்சாத பேராளுமை மறைந்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைப் பதிவேடு எங்களை விட்டுப் பிரிந்தது.

எந்தச் சூழலிலும் முரசொலி நாளிதழ் கீழே விழாமல் தாங்கிப் பிடித்த நிர்வாக நிபுணர் மறைந்தார் .

சில ஆண்டுகளுக்கு முன் தேர்தலையொட்டி முரசொலிக்கு ஒரு கட்டுரை எழுதினேன். அதை அனுப்பும் முன்னர் முரசொலி செல்வம் அண்ணனிடம் காட்டி ஒரு ஒப்புதல் பெற வேண்டி கலைஞர் தொலைகாட்சி அலுவலகம் சென்றேன்.

தனிமையில் படித்துக் கொண்டிருந்தார். என்னை அன்புடன் வரவேற்றவர் , நான் தந்த பிரிண்ட் அவுட்டை வாங்கி முழுமையாக படித்துவிட்டு, நிமிர்ந்து ‘‘நல்லாயிருக்கு! எந்த பத்திரிக்கைக்கு அனுப்பப் போறீங்க?”

“முரசொலிக்கு அனுப்பலாமான்னு கேட்க வந்தேண்ணா.. ”

உடனே ஒரு சிகப்புப் பென்சிலை எடுத்து சடார், சடார்னு கோடுகளாக போட்டுத் தள்ளினார். மறுபடியும் நிதானமாக படித்துப் பார்த்தார். பின்னர் திருப்பி என்னிடம் கொடுத்து, “இப்ப அனுப்புங்க. பாக்ஸ் பண்ணி போடச் சொல்றேன் ” என்றார்.

முரசொலிக்கு நான் எழுதிய முழுப் பக்கக் கட்டுரை ஐந்தே நிமிடங்களில் நாலு பத்தி பாக்ஸ் செய்தியாக மாறி விட்டது.

‘‘இவ்வளவுதானா அண்ணா வரும்” என்றேன்.

எனது வருத்தத்தைப் புரிந்து கொண்டவர், இங்க வாங்க என அருகில் அழைத்து அவர் சிகப்புக் கோடிட்டு நீக்கியிருந்த பத்திகள் ஏன் நாளிதழுக்கு அவசியமில்லை என்பதை விளக்கினார்.

“வாரப் பத்திரிக்கை படிப்பவனுக்கு கட்டுரையின் காண்டெக்ஸ்ட்டை நான் விளக்கமா சொல்லி ஆகணும். ஆனா, டெய்லி பேப்பர் வாசகனுக்கு எல்லாமே தெரியும். அவனும் நம்ம கூடவேதான் டிராவல் பண்றான். என்ன? நாம எழுதுறோம்! அவன் எழுதுறதில்லை. எனவே, ஒரு வரிகூட அவனுக்குத் தெரிந்ததை நாம எழுதி ரெண்டு பேர் நேரத்தையும் வீணடிக்கக்கூடாது. புரிஞ்சுதா?”

**கலைஞர் வளர்ப்பில்லையா?**

சிந்தனையில், பேச்சில், எழுத்தில் என அனைத்திலும் முழுமையான எடிட்டிங் அறிவை கொண்டிருந்த இதழியல் மேதை அவர் என்பது எனக்கு அப்போது விளங்கியது.

ஐந்து நிமிடங்களில் பெரும் இதழியல் பாடமே எனக்கு கற்றுத் தந்திருந்தார்.

ஒரு முறை பெங்களூர் வீட்டில் செல்வம் அண்ணனை சந்திக்க வாய்ப்புக் கிடைத்தது. வெகு நேரம் அரசியல் பேசி விட்டுப் புறப்படும் போது, வழியனுப்ப உடன் வெளியே வந்தார். அங்கே அவர் வீட்டு தெரு முனையில் சாகர் ஹோட்டல் ஒன்றிருந்ததை சுட்டிக்காட்டி எனக்கு அங்கு கிடைக்கும் பெங்களூர் தோசை, இனிப்பு சாம்பார் ரொம்ப பிடிக்கும் என வேடிக்கையாகச் சொன்னேன்.

சட்டென கட்டியிருந்த லுங்கியுடன் ‘வாங்க! போலாம்’ என என்னை கைப்பிடித்து அங்கே அழைத்துச் சென்று தோசை ஆர்டர் செய்து இருவரும் உண்ட அந்தக் கணத்தை வாழ்நாளில் மறக்க முடியாது.

எளிமை. திறமை. பணிவு என மூன்று சொற்களில் அவரின் ஆளுமையை சொல்லி விடலாம்.

கலைஞர் மருமகன், முரசொலி மாறனின் சகோதரர் போன்ற அடையாளங்கள் இல்லாமலேயே இதழியலில் தனித்த ஆளுமையாக திகழ்ந்தவர்.

ஜெயலலிதாவும், பி.எச்.பாண்டியனும் சேர்ந்து முரசொலி மீது உரிமைப் பிரச்சினை எழுப்பி, சட்டமன்றத்தில் விசாரணைக் கூண்டை அமைத்து அழைத்தபோது, சிங்கம் போன்ற துணிவுடன் சென்று அவர் அங்கே முழங்கியதை நாடு மறக்குமா? நாம் தான் மறப்போமா?

சரித்திரத்தில் இறவாப் புகழ் பெற்றுவிட்ட அண்ணன் முரசொலி செல்வமே! போய் வாருங்கள் அண்ணா!

உங்கள் நினைவுகளை கழகம் என்றென்றும் ஏந்தி நிற்கும்.

**எஸ்.கே.பி கருணா**
**மாநிலப் பொறியாளர் அணிச் செயலாளர்.**